இன்றி சுய நிதிக் கல்லூரிகளைத் திறப்பதற்கு தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் எதுவும் பெறப்பட்டால், இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-50

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கலைக் கல்லூரிகளில், தற்போது காலியிடமாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசுக் கல்லூரிகளில் காலியாக இருக்கிற விரிவுரையாளர்களின் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பேரில், 750 விரிவுரையாளர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *55*, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

55—

தொடக்க கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்

***32877—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, இளம்புவனம் தொடக்க கூட்டுறவு வங்கிக்கு நில ஆர்ஜிதம் செய்து, கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2004 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 56, திரு. ப. அரசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

56—

மரம் வளர்த்தல்

***39264—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரிசு நிலங்களில் மரம் வளர்க்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட பத்து மாவட்டங்களில், சுமார் 3100 ஹெக்டேர் பரப்பளவில், வேம்பு, வாகை, புளியம், புங்கை போன்ற தகுதி வாய்ந்த 22 இலட்சம் மரக்கன்றுகள் குளக்கரையில் நடவு செய்ய, ரூ.3.5 கோடி அனுமதிக்கப்பட்டு, 2003-2004—ல் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு இயக்கம் என்ற பெயரில், சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளைத் தங்களது சொந்தச் செலவில் நட்டு, அவற்றிற்கு நீர் ஊற்றி பராமரித்து வருகிறார்கள். அவர்களை ஊக்குவிக்கின்ற விதமாக நமது அரசு அவர்களுக்கு ஏதேனும் ஒரு விருது வழங்குகின்ற வகையில் அவர்களை கௌரவிக்கின்ற விதத்தில் ஏற்பாடு செய்யுமா? அதன்மூலம் தனியார்